# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன் பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
தொலைபேசி: 044-29515590

## <u>ஆணை நாள். 06.07.2026</u>

## <u>முன்னிலை</u>

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

<u>**வழக்கு எண்.SA 17077/D/2025**</u>

திரு வாராகி .. மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
கூடுதல் ஆணையர்,
இணை ஆணையர் அலுவலகம்,
(தலைமையிடம்),
இந்து சமய அறநிலையத்துறை,
நுங்கம்பாக்கம், சென்னை -34. .. பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன் கீழ் மனுதாரரின் மனு நாள் | 03.06.2025 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல் முறையீட்டு மனுவின் நாள் | 23.07.2025 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 14.11.2025 |

******

## <u>ஆணை</u>

இன்று 06.07.2026 முற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு வாராகி அவர்கள் நேரில் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர் திருமதி கோ.ஜெயப்பிரியா, இணை ஆணையர் (சட்டம்) (பொ), இணை ஆணையர் அலுவலகம் (தலைமையிடம்), இந்து சமய அறநிலையத்துறை, நுங்கம்பாக்கம், சென்னை -34 அவர்கள் மட்டும் நேரில் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் 03.06.2025 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், 2018 முதல் 2025 ஆம் ஆண்டு வரை எத்தனை திருக்கோயில்களுக்கு CCTV நிறுவன பெயர், டெண்டர் / கொடுக்கப்பட்ட நிறுவனம் ஒப்பந்த தொகை, அரசாணை மற்றும் சிறப்பு அரசாணை நகல் தொடர்பான தகவல்களைக் கோரி பொது தகவல் அலுவலர், இணை ஆணையர் அலுவலகம் (தலைமையிடம்), இந்து சமய அறநிலையத்துறை, நுங்கம்பாக்கம், சென்னை -34 அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர், தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 19(1)ன் கீழான 23.07.2025 தேதியிட்ட முதல் மேல்மறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தனக்கு முழுமையான தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 19(3)ன் கீழான 14.11.2025 தேதியிட்ட தனது இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அம்மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (06.07.2026) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத்தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய அனைத்து இனங்களுக்கான தகவல்களை 25.06.2025 மற்றும் 01.08.2025 ஆகிய தேதியிட்ட கடிதங்கள் வாயிலாக 2018 முதல் 2025 வரை எத்தனை திருக்கோவில்களுக்கு CCTV பொருத்தப்பட்டுள்ளது என்ற விவரம் அதிகளவில் இருக்கும் காரணத்தினால் சேகரித்து தொகுத்து வழங்குவது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 7(9)ன் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு மனுதாரர் கோரும் தகவல்கள் பொது அதிகார அமைப்பின் மனித வளங்களை திசை திருப்பும் அளவிற்கு அவற்றின் அன்றாட பணிகளை பாதிக்கும் விதத்தில் அதிகப்படியான தகவல்கள் கோருவதாகவும், மனுதாரர் கோரிய திருக்கோவில்களுக்கு CCTV பொருத்தப்பட்ட விவரம் பொதுநலன் கருதி கோரப்பட்டதாக கருத இயலாது என்றும், குறிப்பிட்டு கோரும் பட்சத்தில் தகவல் வழங்க இயலும் என்றுத் தகவல்களை பதிவஞ்சல் மூலம் வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை இவ்வாணையத்தில் சமர்பித்தார்.

5. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரர் ஆஜராகாத காரணத்தினால் மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத்தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில் மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது இவ்வாணையத்தால் உறுதி செய்யப்பட்டு, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஓம்/-(வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA 17077/D/2025</u>**

**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
கூடுதல் ஆணையர்,
இணை ஆணையர் அலுவலகம்,
(தலைமையிடம்),
இந்து சமய அறநிலையத்துறை,
நுங்கம்பாக்கம், சென்னை -34.

**<u>மனுதாரர்</u>**
திரு வாராகி,
த/பெ. திரு ராதாகிருஷ்ணன்,
க.எண்.2/3, சுதானந்த பாரதி தெரு,
கணபதிபுரம்,
கிழக்கு தாம்பரம்,
சென்னை - 600 059.

***Copy to: File***
***VP / PA***